**323—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***29807—திரு. கடம்பூர் ராஜு:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவில்பட்டி தொகுதி, கடம்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் உபபொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதியில் உள்ள கடம்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சங்கங்களிலிருந்து தினமும் 1,200 லிட்டர் பால் மட்டுமே திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு வழங்குகின்றார்கள். கடம்பூருக்கு மிக அருகில் 12 கிலோ மீட்டர் தொலைவில் கயத்தாறில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான் மையம் உள்ளது. மேலும், அதற்குப் பக்கத்தில் கோவில்பட்டியில் பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் உள்ளது. இவ்விரண்டு இடங்களுக்கும் கடம்பூர் மற்றும் அதன் அருகிலுள்ள பாலைச் சேகரித்து தரமான பாலாக திருநெல்வேலி பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கின்றார்கள். கடம்பூரில் உற்பத்தியாகும் மொத்த பாலையும் பெற்றுக்கொள்ளத் தேவையான உள்கட்டமைப்பு வசதியும் அருகிலேயே உள்ளது. எனவே, கடம்பூரில் தனியாக ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை. மேலும், கடம்பூர் பகுதியில் பால் உபபொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்கும் அளவிற்குப் பால் உற்பத்தி இல்லை. பால்கோவா, நெய் போன்ற*

2014 ஆகஸ்ட் 4]

*உபபொருட்கள் தேவையான அளவு தயாரிக்கப்படுவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஒன்றிய பால் பண்ணையில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளதால், கடம்பூரில் பால் உபபொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி என்பது ஓரே நாளில் படைக்கப்படுவதல்ல. ஒட்டுமொத்த சாதனைகளின் தொகுப்புதான் வெற்றி என்பார்கள். அந்த வகையில் சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கி வெற்றி மேல் வெற்றி குவித்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிச் சரித்திரங்களாக காவேரியை மீட்டெடுத்ததில் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தை உயர்த்தியதில் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) நெய்வேலி என்.எல்.சி. நிறுவனப் பங்குகளை மீட்டெடுத்ததில் வெற்றி, தமிழர் தம் மானம் காத்திட வேஷ்டிக்கு வந்த தடையையும் தகர்த்தெறிந்ததில் வெற்றி, கடந்த மூன்று ஆண்டுகளில் 300 ஆண்டுகள் சாதனைகளை நிகழ்த்தி, முழுமையான வளர்ச்சி பெற்றதில் வெற்றி, தேர்தல் வாக்குறுதியில் 90% நிறைவேற்றி, நாடாளுமன்றத் தேர்தலில் 97% பெற்றதில் வெற்றி, 2016-ல் பெறப்போகும் 100 சதவிகிதம் வெற்றி (மேசையைத் தட்டும் ஒலி) "வெற்றி மேல் வெற்றி வந்து எங்கள் மாண்புமிகு அம்மாவையே சேரும்" என்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதத்தை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு பணிவாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் தொகுதியில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக இருப்பது கால்நடை வளர்ப்புத் தொழிலாகும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் கடம்பூர் பகுதியில் பால் உற்பத்திக் குறைவாக இருந்தாலும்கூட, கயத்தாறில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்து 10,000 லிட்டர் பால் வைக்கும் அளவிற்கும், பத்தாயிரம் லிட்டர் உற்பத்தியாகின்றது என்று மாண்புமிகு அமைச்சர்*

அவர்கள் சொன்னார்கள். அதனையும் கணக்கில் எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் பால் உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் பால் உற்பத்தி நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் கயத்தாறு பகுதியில் பத்தாயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. அங்கு இரண்டு பால் குளிரூட்டும் நிலையம் இயங்குகின்றன. அங்கு மேலும் பால் கொள்முதல் ஆகுமேயானால், அந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறியதை ஆய்வுசெய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றப்படும் என்று சொல்லியதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நன்றி கூறி, அமருகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 324, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*